# ஆதி மார்க்க னீதி மொழி

**August 2024**

***இதழ் 37 – ஆகஸ்ட் மாதம் 2024 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே! ஆதி மார்க்க னீதி மொழியின் ஜூலை மாத மின்னணு சஞ்சிகை 37வது இதழாக உங்கள் கைகளில் தவழ்கிறது. சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள வேதாந்தம், அழிவிலா நித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தையும் கையில் வரவழைத்து தரும் கிரயம் உள்ள கிரந்தமாகும். இதன் செயல் இன்னதென வேத வாயிலாக உணர்ந்த ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் வழங்கிய முத்திப் பேருரையின் இரத்தினச் சுருக்கமே இந்த மின்னணு சஞ்சிகை. இதன் அடிநாதம், இதனை அண்டி வந்த மக்கள் யாவரும் வாழும் காலத்திலேயே அழிவிலா நித்திய பூரண மேம்பாடுகளும் பிறவா நெறியும் பெற்று வாழ வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கமே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின் நமனில்லை நாணாமே... என்ற திருமூலர் பிரானின் திருவாக்கின் படி மக்களை உய்விக்கக் கூடிய இந்த அரும் பெரும் பிறவா நெறி செயலைப் பெற்று வாழ்கின்ற மக்களாக இன்று ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள் உள்ளனர். பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள், ஒன்றே குலமாகவும் ஒருவனே தேவனாகவும் தன் மக்களுக்கு விளக்கி அருளி ஆக்கி வைத்த அரும் பெரும் செயலை உள்ளடக்கிக் கொண்டு பேசப்பெற்ற ஒரு மொழியாக மின்னுவதே ஆதி மார்க்க னீதி மொழி. இது சகல மொழிகளையும் உள்ளடக்கிக் கொண்டு அனைத்திற்கும் மேலான மொழியாக, உலகில் உள்ள சர்வ ஜீவராசிகளிலும் நின்று விளையாடும் ஜீவனின் ரகசியத்தை வைத்து பேசப்பெற்ற மொழியாக உள்ளது. இதனை உணர்ந்து தேடி அடைந்து கைவரவாகப் பெற்ற யாவர்க்கும் நன்மையாகிய பிறவா நெறி வந்து வாய்க்கும் என்பது சத்தியம்.



Copyright © AMNA Trust, Chennai	

**ஒரு மொழியாம் குருமொழி மெய்ப் பாலறிந்தால் உறுகோடி னூற்கும் பொருளாகு மன்றோ என்ற அரும்பெரும் நிலைகளை எல்லாம் உள்ளடக்கி பேசப்பெற்ற இந்த நீதி மொழியை கேட்டும், படித்தும், தொடரும் மக்கள் யாவரும் பிறவா நெறி பெற்று நீடூழிவாழ பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்தினை வேண்டி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*குரு என்பவர்கள் உன் தலை ஓட்டில் உள்ள விதி எழுத்தை மாற்றி, மதி எழுத்தை அங்நுப் பதிப்பிப்பார்கள். உன் பாவ இருட்டை உலர்த்தி, உன்னுடைய இதயாசனத்தில் சிவன் என்னும் வாடாத தீபத்தை ஏற்றிவைப்பார்கள். சிரஞ்ஞீவிப் பட்டத்தை உன் தலையிற் சூட்டிவைப்பவர்கள் அவர்களே.*

*முன் காலத்தில் பெரியவங்ங எழுதும்போது உ பிள்ளையார் சுழிக்குச் சமத்துவமாக எதையும் எழுதமாட்டார்கள். ஏட்டின் தலையில் அந்த அடையாளக்குறி போட்டுவிட்டு, னேர் கீழே சிவமயம் என்று எழுதுவார்கள். இந்நப் பெரும்பலனை, சிவமலையைப் பற்றிப்பேசி, பிரயோசனத்தளவில் உங்களுக்குத் தருபவர்கள், இன் னெடிய உலகத்தில் இது காலம் எம்மைத் தவிர வேறு யாரும் இல்லை. உங்கள் ஜீவனுக்கு அவசியமாக வேண்டிய அந்நச் சிவசெங்ஙோலை ஒரு சத்திய சுத்த வாக்கியராகிய மெய்க்குருபிரான் இரக்கத்தால்தான் னீங்கள் பெறமுடியும். அதுவே னற்றாள், சிவனடி பாதம், ஆதம்பாதம். அத்திருப்பாதம், உன் னெஞ்ஞகமாகிய னடு வீட்டில் வைத்திருக்கும் புதையல். புராதனச் சொத்து. அதை அறியாதவர்களே கல்லாதவர்கள்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 ஜூலை மாத அவை நிகழ்வுகள் – 2024 ஆகஸ்ட் மாத வெளியீடு

## 04-07-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* நாம் எண்ணும் உபதேசம் யாவும் ஆசானை அறியவும், வேதம் விளங்கவும், வாக்மி ஆவதற்குமே அன்றி சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள உபதேசம் என்பது பேரறிவாக ஐம்புலக் கதவை அடைப்பதாக உள்ளது.

**திருமெய்ஞானக் கொரல்: வாக்கியம் எண் 03ன் தொடர்ச்சி :**
**குருபிரான் அருளமுதம்:**
ஆசான் அருளும் மந்திர ஸ்திரம் கொண்டு மனுவாகி தேவப்பதம் அடைவதற்கான வித்து நரனே. நீதி எனும் பொருள் ஆன மனு வாழுமிடமே நித்திய சொர்க்கம். மெய்யுணர்வு பெற்று ஒழுக்கமுடன் வாழும் மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். வந்த வேதமாகிய ஆசான் அருளும் உபதேசம் பெற்ற மக்களே தன்னை அறிந்த சிவமான ஜாதி. அவர்களே அன்பையும் பண்பையும் அறிவர்.

**மெய்ம்மணஞானம் - குருபிரான் அருளமுதம்:**
தந்தையின் எண்ணத்தால் விளைந்த அனித்திய தேகத்துள் விளங்கும் னித்திய தேகத்தை ஆசான் அருளால் அறிந்து, யவ்வனமாக்கும் செயலே பிருக்தயோகம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அறிவு வடிவு என்று அறியாத நம்மை அறிவு வடிவு என அருள் செய்யும் நந்தியாக வாலைத் தாயாக வரும் வள்ளலின் வாய்மையே நம்மை அறிவு நிலைக்கு ஏற்றி வைக்கிறது என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 06-07-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் கௌதம்:* மறதியற்ற னினைவே பரிசுத்தம். அகத்தில் நம்மை ஆண்டு கொண்டு தூக்கி சுமந்து கொண்டிருக்கும் இறைபொருளே பரிசுத்தமாக, திருவடியாக, நற்றாளாக, கலிமா, காயத்ரியாக, தெய்வமாக உள்ளது என்பதை நாம் கண்டு உணரச்செய்வது குருவின் இரக்கமே. அறிவுப்பசிக்கு ஆகாரமாகிய உவட்டா அமுதுணவு ஒலிவீட்டிலிருந்து அள்ளி வர்ஷிக்கும் குருவின் னாதமே அழல் காற்றை அமுத காற்றாக மாற்றவல்ல பரிசுத்த ஆவியாக உள்ளது. அசைவற்ற குணக் குன்றான பிரம்மமே சைதன்யப் பொருளாக, மூலப்பண் ஆரமணி உண்டை பெட்டகமாக பரிசுத்த ஆவியாக, சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறது என்பதை குருவின் அருளால்தான் காண இயலும்.

**பண்டைனான் மறை பேசும்ப ரிசையன்**
**அண்டர்ப திக்கெனை யேற்றியே - முன்னாள்**
**கொண்டக ளைப்பெலா மாற்றியே - ஜெயப்**
**பழுதி லாது தனித் தொளிரு னாதவுடல்**
**அழிவி லாதபதி யோகர் யோகியென** **(சேவடிச் சேகரம்)**



Copyright © AMNA Trust, Chennai

என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, பிறவிப் பெருங்கடலில் உண்டான களைப்பை எல்லாம் மாற்றி, இவ்வுலக இச்சையை விட்டு எதார்த்த மெய்யில் னின்று அகமுகத்தில் னோக்கும் அறச்செயல் பழக்கி, அழியாப் புகழுடம்பில் ஏற்றிவைத்து, யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என னான் மறைய கற்றுக் கொடுத்து நம்மை ஞானியாக ஆக்க வல்லவரே பேசும் பரிசையர்.

சாலை என்றொரு மெய்மேனி காட்டும் மெய்யான வழியே பழுதில்லா நாத உடலில் நம்மை ஏற்றிவைக்கும். இறை பொருளைக் காட்டி இறை நிலைக்கு ஏற்றி வைக்கும் ஆசானே வணக்கத்திற்கு உரியவர். மனிதர்களின் ஏற்றத் தாழ்வை மாற்றிச் சமத்துவ ஞானம் வரச் செய்பவரே சமத்தர் என்ற பகிர்வுடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*சிவனுடைய ஸ்வரூபத்தை அறியாமல் சிவபூஜை செய்வானாயின், அது சித்திரத்திலுள்ள விளக்கைப்போல் பேருக்குமாத்திரம் பூஜையாகும்.* ~ ***குரு கீதை***

## 11-07-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய னாயகம் என்குருவின்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

ஆசான் அருளும் உபாய மொழியின் மூலம் மாயக் கூத்தின் வகை அறிந்து அதிலிருந்து விடுபட்டோரே அழியாப் பதி வாழ்வில் குடியேறுவர். கலிமா பொருள் அறிந்தோரே மும்மலம் வென்று தனது முப்பொருள் கோலமாக விளங்கும் ஓர் பொருளாகிய சிற்றம்பலப் பொருளான ஜீவனை தரிசனம் செய்கின்றனர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் 03-ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**

துக்க உடலினுள் இருக்கும் னித்திய உடலே, மறையோன் சொரூபமாக, ஆண்டோன் சொரூபமாக, என்றும் இருக்க வந்த ஈசன் சொரூபமாக, வேத உடம்பாக இருக்கிறது. வினைத் தலைவனாகிய மனமே சொர்க்க நரகத்திற்கு காரணமாக உள்ளது.

*ஜீவசகோதரி கல்யாணியின் புரிதலாக, ஜீவசகோதரர் மணிமாறன் பகிர்ந்தது:*

அறியாமை, மனதின் ஆசை, தூக்கம், உலக பொய்க்கல்வி, உடல் அழகு, பிறவிப்பிணி, உலகப்பற்று, முக்குணம், அனித்தியம், மோகம், அஞ்ஞானம், பொய் வணக்கம், தூலவாழ்வு, சிற்றின்பம், சைத்தான், இருள், சவம், தன்னறிவு, துக்க உடல், கள்ளக்குகை இவை யாவற்றையும் விட்டதால் –

அறிவு வடிவான குருபிரான், ஐம்புலனை அடக்கும் உபாயம், தூங்காமல் தூங்குவது, ஜீவனுக்கான மெய்க்கல்வி, ஜீவதேகம், பிறவாமை, தெய்வப்பற்று, னிர்க்குணம், னித்தியம், சிவபோகம், மெய்ஞ்ஞானம், மெய்வணக்கம், மெய்யான வாழ்வு, பேரின்பம், சுல்தான், அருள், சிவம், மெய்யறிவு, சுகஉடல், ஜீவகுகை ஆகியவற்றை தொட்டதாக மாறிக் கொண்டது.

**மெய்ம்மண ஞானம் - குருபிரான் அருளமுதம் :**

கடுமையாக பற்றிக் கொண்டு இருக்கும் அறியாமை எனும் வல்லிருளே கடலுக்கு நிகராகவும், பிறவிச் சுழலே பொங்குமாங் கடலாகவும் உள்ளது. ஒரு பிரம்மனிஷ்டரின் முன்பு செல்கையில் நம் மனம் அசைவற்று சுத்த அறிவாகி சைதன்யமாகிறது. அமானிதமெனும் சீராகிய அறிவை தன்னில் அறிந்தவரே மனுஈசன். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடன் பசிப்பிணியும் பிறவிப்பிணியும் தீர்க்கவல்ல திருத்தலமாக ஆதி மார்க்க னீதி அவையின் **சரவண னந்தவனம்** திகழும் என்ற குருபிரானின் திருவாய் மொழியுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai August 2024

## 13-07-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி **இணங்விய சுபாவம் பார்த்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.



*ஜீவசகோதரர் சங்கர்:* பெரியோர்களின் செழுஞ்சீதள மனோ னோக்கிற்கு இணங்கி, மனதின் இச்சை விலக்கி, அறிவு வழி நின்று சிவானுபவம் பெறும் நிலையே இணங்விய சுபாவம். ஞானிகள், லாம் எனும் உயிரின் ரகசியமும், இஸ்லாத்தின் ஈமானும், சிரசில் இருக்கும் இருதயத்தில் பூட்டடங்காச் சாவி கொண்டு திறந்து, அகம் துறக்கச் செய்கிறார்கள்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 181 - குருபிரான் அருளமுதம்:**

ஞான பிதாவாகிய ஆசானே நம்மை ஆலவாய்ச்சூலில் ஈன்றெடுத்து செவியில் சுவை உணர்ந்த மக்களாக ஆக்கி, மனதற்ற பரிசுத்த நிலையில் குடியேற்றி நித்திய சூரியர்களாக ஆக்குகிறார்கள். அழியாப் பொருளை அகத்தில் கண்டு வணங்கும் பாக்கியம் பெற்ற மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். ஐந்தொழிலுக்கு அரசராக வரும் உலகாகிய குருபிரானை எதார்த்த உள்ளத்துடன் அண்டிய மக்களே ஜீவன் கண்ட ஜென்ம சாபல்ய குலத்தினர். ஆசானின் நாதமே மெய்ஞான வாழ்விற்கும் இவ்வுலக வாழ்வில் அறிவுத் தெளிவுடன் வாழ்வதற்கும் அடித்தளமாக விளங்குகிறது.

ஆசானின் அருளால் அறியாமை இருள் விலகி மூன்றாவது கண் திறக்கப்பெற்று காண்பதே கோடி சூரியப் பிரகாசமாகும். இறைவன் தன் சாயலில் மனுவைப் படைத்தான் என்பது குருவானவர் தன் ஜீவசுவாசமான நாதத்தால் சீடனின் தன்னுலகான ஜீவாத்மா இன்னதென அறிய வைத்த செயலாகும். இதன் சான்றாக காளிதேவி, துன்முகி அரக்கி வதத்தின் போது அவளது கர்பத்தில் இருந்த சிசுவைக் காத்து தன் காதில் சூடியுள்ளதும், மவுலி எனும் மூன்று நிலைகளாக பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் முகங்கள் ஒரே லிங்கத்துள் பொதிந்துள்ள சந்திரமவுலீஸ்வரர் ஆலயமும், பல கோடி ஆண்டுகளுக்கு முன் மண்ணில் புதைந்து கல்லாக மாறிய சரித்திர வரலாறு மிக்க கல்மரங்களும் **திருவக்கரை** தலத்தில் உள்ளது.

**மெய்ம்மண ஞானம்:**
*ஜீவசகோதரி ஸ்ரீமகாலட்சுமியின் புரிதலாக ஜீவசகோதரர் சிரஞ்சீவி பகிர்ந்தது:* பிறவிப் பெருங்கடலே பொங்குமாங்கடல். பிறப்பு இறப்பற்ற இடமே கங்குல் பகலற்ற இடம். ஐம்புலனுக்கும் வல்லமை அளிக்கும் அக்கண்ணே மெய் இருதயமாக பச்சை, ரத்தினம், மரகதம், வைரம், தங்கம், ஒட்டியாணம், செந்நிலதம் எனும் சிபத்தாக நெற்றிப் புருவத்திடையும், முத்து, ஜீவரத்தினம், பவளம், ஜோதி, நாகரத்தினம், குண்டலம், கம்மல், சிலம்பு, னாதம், மஞ்சள், பசுங்கலாபகம் சாயல் எனும் 12 அட்சரங்களாகவும் உள்ளன. ஓரறிவாக இருப்பதே மெய்உணர்வு பெற்று பிறவாமை பெறும் வழியாக உள்ளது. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 14-07-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* சமரசம்-சமாதானம் இரண்டும் உயிரொட்டிய ரகசியமாக உள்ளது. ***சிவாயனம*** எனும் பொருளை அறிந்தால்தான் அதைப் பற்றிய சிந்தனை வரும். நாம் படைத்ததன்றி நம்மை படைத்ததே இறைவனாக இருக்க முடியும். சுக்குலம் எனும் ஒரே குலத்தில் உண்டான மானிட ஜென்மம் தனக்குள் இருக்கும் இறைவனை ஆசான் அருளால் அறிவதே இவ்வுடல் எடுத்ததின் பயன். கோடி சூர்யப் பிரகாச இறைவனின் நிஜமான அவதார மகிமைகளை அறிவதற்கு குருவருளால் மூன்றாவது கண் திறப்பிக்கப் பெற வேண்டும். இறைவனின் படைப்பில் ஐயறிவு வரை விசேஷ அறிவு இருந்தாலும், மனிதனிடம் தான் அதனை அடக்கி ஆளும், வல்லப ஆறாவது அறிவான மனம் உள்ளது. குருவின் திருவருளால் மலர்மிசை ஏறியே மனமற்று மாசற்ற இறைவனை தரிசிக்க முடியும். தியானத்திற்கு மூலமான திருவுருவை குருவின் அருள் கொண்டே தரிசிக்க முடியும். அவரவருள் இருக்கும் அழிவற்ற ஒரு பொருளை ஆறாவது அறிவின் மூலமாக அறிந்து அதனுடன் இரண்டறக் கலப்பவனே அழிவற்ற நித்தியன். சிவராஜ பாட்டையில் வழி கூடி நடக்கும் தொண்டனின் அமானிதக் கடன் ஏழாவது பிறப்புடலம் எடுக்கும் போதே தீர்கிறது.

*ஜீவசகோதரர் பார்த்திபன்:* மானிட தேகத்தை கட்டிய அழிவற்ற இறைசக்தி மனுவின் சிரசினுள் பிரதானமாக அமர்ந்துள்ளது. ஒரு மெய்க் குருபிரானின் பேரிரக்கத்தால் அதை தரிசித்தவன் உடலுள்ள போதே நித்திய சொர்க்கத்தில் வாழ்கிறான். மனுவின் கற்பனைக்கு அப்பாற்பட்டதே ஞானம். உடலுள்ள போதே உத்தமரின் அருளால் சாகும் முன் சாகப் பழகி சன்மார்க்கியாக ஆகமுடியும். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 18-07-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி **ஆதியே அந்தமே...** என்ற சிவானந்த போதம் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

ஆதியை அறிய வைக்கும் அறிவுடன், வேதம் ஓதி மெய்வழி தொடர்ந்திடவும் போதிக்கும் தலமே ஆதி மார்க்க னீதி அவை. வாழும் காலத்தில் ஒழுக்கம் சார்ந்த வேத வழி வாழ்வுடன் வினை தீர்த்து பிறவாமை பெறும் செயல் பெறும் வழியே மெய்யான மெய்வழி. சூரியனின் தட்சிணாயன புண்ணிய காலத்தில் குருமுகமாக மேலவரிடத்தில் சார்ந்து போன நாள் மீண்டு வரும் செயலே புண்ணிய நாள்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் வாக்கியம் 03ன் தொடர்ச்சி - குருபிரான் அருளமுதம்:**

கீழ் ஏழு உலக எண்ணம் யாவும் மேல் ஏழு நோக்கமாக மாற்றும் செயலே அமானிதம். எட்டாவது நிலையாகிய சொர்க்கமே ஜீவாத்மா பரமாத்மாவுடன் சேருமிடம். மனிதனுக்கு நரக பயத்தை உணர்த்தியே சாலை ஆண்டவர்கள் சொர்க்கத்தின் உன்னதம் உணர்த்தினார்கள். இறப்புக்கு பின் வரும் நித்திய வாழ்வை அறிவிக்கும் மெய்க்கல்வியும், இருவினை நீக்கி இறவாமை பெறும் பிரம்மவித்தை அருளும் அரும்பெரும் செயல் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை.



Copyright © AMNA Trust, Chennai

**மெய்ம்மண ஞானம் - குருபிரான் அருளமுதம்:**

அழிவிலா நித்திய பூரண மேம்பாடுகள் யாவும் கையில் வரவழைத்து தரும் கிரந்தமே ஆதி மெய் உதய பூரண வேதாந்தம். பாதாளமே கதியெனப் பாய்கின்ற மனதை, பரமபத நிலைக்கு ஏற்றும் வல்லபச் செயல் கொண்டதே சாலை ஆண்டவர்கள் அருளிய வேத வேதாந்தங்கள்.

மனிதனின் அவ லட்சணமான 12 ராசி நிலையை லட்சணமாக ஆக்கும் சூட்சுமத்தை சாலை ஆண்டவர்கள் லட்சணத்தின் நிலைகளாக அருளியுள்ள வேதம் சற்குருவின் கருணையால் தன்னகத்தில் பாதம் அறிந்தவர்க்கே விளங்கும். முப்பாழை முப்பாலாக மாற்றும் பெரியோரின் னாத லட்சணமே மனிதனை வேத லட்சணத்திற்கு உரியவனாக்கி பவனாசமாக்கி, ஏழாம் பிறப்புடலம் எடுத்து துவிஜனாக்கி பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியாகும். அத்வைத நிலையில் நம்மை ஆக்கி சிவபோகத்தில் ஆழ்த்தும் பெரியோரின் னாதமே னன்னாதம். ஆசானே ஆதி அந்தமும் சூல் கொண்டீன்ற பல்லாண்ட நாயகியாகவும், தாயும் தந்தையுமாகவும், ஆதினாயகம் அரசர் னாயகம் மாது னாயகமாகவும் உள்ளார்கள். ஆசானை வெறுக்காமல், மனதை வெறுத்து உருக்கமுடன் ஊசிமுனை வாசலில் பாய்ந்து, ஓ முடிந்த பட்டணத்தில் ஊடுருகிச் சென்றடையும் இடமே அந்நமுள்ள வேதாந்த திசை னாத வெளியாகும். அதில் மனம் ஊன்றி உறைந்து குடியேறி வாழ்ந்தால் வெல்லாமல் போவதில்லை மெய்ஞ் ஞானத்தை என்ற பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதத்துடனும் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

*பிரியமுள்ளவளே! வேதங்ஙளையும் ஆறு அங்ஙங்ஙளையும், ஆகமங்ஙளையும், அத்தியாத்ம முதலிய சாஸ்திரங்ஙளையும் ஒருவன் ஓதியிருந்நபோதினும், குருவின்றி மெய்ஞ்ஞான முண்டாகாது.* ***~ குரு கீதை***

## 21-07-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி, **வந்தாய் என் மனம் புகுந்தாய் மன்னி நின்றாய்...** என்ற ஆழ்வார் பாசுரத்துடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரி ஜான்சிராணி:* நவக்கிரகங்களை இயக்கும் மனமெனும் சூரியனே, ஞானசூரியனாக வரும் குருபிரான் அருளால் அறிவு வடிவாக மாறுகிறது. ஆசானின் அருளே மனிதனை பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியாக உள்ளது. புறத்தில் சூரியனின் தென்முக, வடமுகப் பயணம் மனிதனிடத்தில் சூக்குமமாக உள்ளது. சந்திரனும் சூரியனும் இல்லாத இடமே ஆசான் நம்மை குடியேற்றும் காலமற்ற இடமாக உள்ளது.

*ஜீவசகோதரி சண்முகப்பிரியா:* விசேஷ அறிவு கொண்ட மனுவின் அகஉலக காரியத்திற்கே இறைவன் தேவை. தோற்றத்தில் நரனும் மனிதனும் ஒன்று போல் இருந்தாலும் குருவருளால் மறுபிறப்பு பெற்றவனே மனிதன். குருபிரான் அருளும் அறிவறிந்து மெய் உணர்வின் அனுபவம் பெற்று உண்டாகும் நம்பிக்கையே ஞானம் பெறுவதற்கான உறுதுணை.

*ஜீவசகோதரி ஸ்ரீமகாலட்சுமி:* புறத்தில் நகல் இறைவனை வணங்குபவனே பிறவிச்சுழலில் சிக்குகிறான். இதனையே திருமந்திரம் *குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்; குருட்டினை நீக்கா குருவினைக் கொள்வர்* என்கிறது. **வாயிற்சொன்ன மந்திரங்ஙள் வாய்செத்தபின்னே வஞ்ஞு எமனுக்குப் பதில் வந்துசொல்லுமோ** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரி ஶ்ரீலட்சுமி:* மனுவின் உள்ளக்கோவிலில் உறைந்துள்ள இறைவனை உணர்த்துவதே கோவில்கள். உள்ளமாகிய பெருங்கோவிலில் நுழைந்திட அறியாமை எனும் காலணி அகற்றி, தேசிகரின் வாசகம் எனும் தீர்த்தத்தில் நீராட வேண்டும். ஆசான் அருளால் அறிவுக்கண் திறக்கப் பெற்றவரே இறைவன் இருக்கும் இதயக் கமலத்தை தரிசிக்க முடியும். நரனை மனுவாக்கும் செயலே பலியெடுக்கும் சங்காரமாகும்.

*ஜீவசகோதரி சங்கீதா கார்த்திகேயன்:* வினை தீரும் பொழுதே நம் அறியாமை அகல்கிறது. நாம் யார் ? நம் கடமை என்ன என அறிவதே தன்னை அறிதல். சரிகின்ற சரீரத்துள் இருக்கும் அஞ்ஞானத்தை அறுப்பதுவே வதம். அகவாழ்வை அறிய ஆசான் துணை வேண்டும் என அறியவைக்கும் தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவசகோதரி சரஸ்பதி வண்ணன்:* அறுசுவை அறியும் ஆறறிவு கொண்ட மானிட ஜென்மம் குற்றமுடனும், இதற்கு மாற்றமாக ஐயறிவு கொண்ட ஜீவபேதங்களும் உள்ளன. உடலுக்கும் அறிவின் வளர்ச்சிக்கும் ஆதாரமான அறுசுவையில் உன்னத சுவை இன்னதென அறிய வைத்து நம்மை அனுபவிக்கச் செய்யும் வல்லபம் ஆசான் ஒருவருக்கே உண்டு. மனிதனின் துக்க நிவர்த்திக்கே இறை சொரூபமாகிய அறிவு வழங்கப்பெற்றுள்ளது.

ஜீவசகோதரிகளின் முத்திப் பேருரையுடனும் பரிசுத்த ஆவித்தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 21-07-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ நாயகன் இல்லம்
## பௌர்ணமி சிறப்பு அவை
## தொகுப்பு: ஶ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழிச் சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி, **அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார்...** எனும் வேதாந்த தேசிகரின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

ஆடி மாதத்தின் முதல் பௌர்ணமியே குரு பூர்ணிமா. மனம் அலையாமல் பாதுகாக்கும் அறச்செயல் செய்யும் நாளெலாம் ஏற்றமிகு பௌர்ணமி நாளே. நம்மை அறிவுத் துலக்கத்தில் ஆக்க வருவதே குருவின் வாய்மை. நுண்ணிய அறிவுத் துலக்கம் பெற்ற மெய்ஞானிகள் கணித்த சதுர்யுகத்திலும் வந்த **72 கோத்திரப் பரம்பரைகளான** மெய்ஞானச் செம்மல்களின் கணக்கே **லட்சத்து 24 ஆயிரம் நபிமார்கள்**. இந்த தத்துவ ரகசியம் அறிந்தோரே தன்னை அறிந்த மகத்துக்கள். குருவருளால் மெய் உணர்வு பெற்று இறப்பும் பிறப்பும் எங்கே என ஆய்ந்து கடவுளை அறிவதே ஞானம். பிறந்த குழந்தையை உயிர்ப்பிக்கச் செய்யும் காற்றுடன் ஜீவன் குடியேறியதின் அடையாளமே மூச்சும்-சப்தமும். இதனையே சாலை ஆண்டவர்கள் **ஆதி யந்நமும் தான் கடந்நெனை ஆண்ட என்குல னாயகம்...** என அருளியுள்ளார்கள்.

ஒரு சற்குருபிரானின் இரக்கமே ஒருவனை தவத்தில் இருத்தி திருத்தி நிறுத்தும் வல்லமை கொண்டது. தூலம் தாங்கி வரும் மெய்குருவின்றி முக்தி அடையலாம் என கூறும் எவரும் அந்தரங்க நாஸ்திகனே. அழியா நிலத்தாள்கை இன்னதென அறிந்து பவத் தொடக்கை வென்ற ஆண்டவர்களின் சந்ததிகளே அழியா வஸ்துவாக விளங்கும் அவரவரின் நாமத்தை அறியும் மெய் அறிவு பெற்றவர்கள். **எமனணுகா சத்திய பரிசுத்தவான்களின் சபையில் எமன் கைவசப்பட்டு பிண நாற்ற தீட்டுக்குரிய னரர் நிலை நிற்பதில்லை** என்ற **தாவீது நாயகத்தின்** வாசகங்களும், மெய் வணக்கம் பற்றிய **கௌதுல் ஆலமின்** எச்சரிப்பு வசனங்களும் இன்னதென ஆய்ந்து அறிந்தவனுக்கே அழிந்திடா நிலம் விடியும்.

**வந்தது னிஜந்நான் அய்யா வளர் கைலாயம்** என்ற செயலுள்ள வாசகம் நிறைவேறும் தலமாக இன்று ஆதி மார்க்க னீதி அவை திகழ்கிறது என்ற குருபெருமானின் அருளுரையுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடலும் அவை நிறைவானது



Copyright © AMNA Trust, Chennai 

## 25-07-2024 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதங்களைப் போற்றி அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
சர்வ மூல மந்திரங்களும் நிரூபணம் ஆகுமிடம் மனிதனிடம் தான் உள்ளது. அனித்திய சுகத்தையே நாடும் மனமே துக்கத்திற்கு காரணமாக உள்ளது. **அகத்தில் உள்ள நித்திய சுகம் தரும் வீட்டினை அந்தர் மா முகமாகக் கண்டு ஓங்குபவரே அனந்தர்** என்பது சாலை ஆண்டவர்களின் திருவாக்கு.

**திருமெய்ஞ்ஞானக் கொரல்: வாக்கியம் 03ன் தொடர்ச்சி:**
**குருபிரான் அருளமுதம்:**
உலகிலுள்ள யாவருக்கும் நிச்சயமற்ற வாழ்வே நிச்சயமாக உள்ளது. அமரருள் உய்க்கும் அடக்கம் என்பது நாவடக்கம், புலனடக்கம், பொறியடக்கம், மனமடக்கம் போன்றனவாம். பிறப்பு இறப்பின் ரகசியத்தை இவ்வுடலினுள் அறிந்தவருக்கே அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதின் ரகசியம் தெரியும். அழியாத செம்பொருளை பெற்றவர்கள் பிறப்பெனும் பேதமை நீங்கியும், மெய் மணத்தை அறியாதவர்கள் நீங்காத பேதைகளாகவும் உள்ளனர்.

*ஜீவசகோதரி கல்பனா:*
மெய்ம் மணமாகிய ஆசானின் நாதமே நம் அறியாமை அகற்றி அறிவுப் பிரகாசத்தில் ஆக்குகிறது. கடல் போல் பொங்கும் மனதின் செயலே பொங்குமாங்கடல். மேல்ஏழு சிபத்து மற்றும் கீழ்ஏழு நபுசு உலகிலும் நம்மை புகுத்துவது மனமே. இதயம், நெற்றி, கண்கள், மாமுகம், கழுத்து, தன்னிடை, மார்பு என இரவு பகலற்ற இடத்தையும், தங்கம், முத்து, பவளம், வைரம், மரகதம் என ஜீவனின் பிரகாசத்தையும் ஒளிரச் செய்யும் ஆசானே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராக வருகின்றார்கள். அம் மதி நாவின் மெய்ம்மண நாதம் கொண்டு தூங்காமல் தூங்கி வஞ்சப் புலன் சதியிலிருந்து மீள்வதே பிறவாமை பெறுவதற்கான ஒரே வழி.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**

**மார்க்கம்பட்டியான் பேரனும், ஜமால் ஹுசேன் குமாரனுமாகிய ஷெய்குல் முர்ஷதுனா எனும் காதிரு பாட்ஷா அவர்கள் அருளிய திருப்பாடலே பூரணப் புதையல்.**

கேட்டதும் கேளாததும் தரும் அட்சய பாத்திரமாகிய மெய் ஆசானே முழுமை எனும் பூரணப் புதையல். எவ்வுலகிலும் எக்காலமும் எல்லா உயிர்க்கும் தலைவனான பிஸ்மில்லா ஹிர்ரஹ்மான் னிர்ரஹீம் எனும் இறைவனை வணங்கியே இப்பாடலை ஓதுவதாக சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். சிருஷ்டி-ஸ்திதி-சங்காரம் என ஆயிரம் கரங்கள் கொண்டு முத்தொழில் புரியும் ஆதித்ய ஹிருதயனாம் சூரியனை இயக்கும் அளவிலா ஆற்றல் கொண்ட இறைவனுடன், தான் இரண்டறக் கலந்து பெற்ற அனுபவத்தை தங்கள் குருபிரான் முன்னிலையில் மெய்வழி ஆண்டவர்கள் உரைத்த ரகசியமே பூரணப் புதையல், என குருபிரான் அருளியதும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*சிவபூஜையில் ரதனாக (அதாவது காம முடையவனாக) இருந்நாலும், அல்லது விஷ்ணு பூஜையில் ரதனாக இருந்நாலும் குருதத்துவத்தைக் கைப்பற்றாதவனாயின், அவையாவும் வியர்த்தமேயாம். இது னிச்சயம்.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 27-07-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி, வள்ளல் பெருமான் அருளிய **தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே...** என்ற திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.



**குருபிரான் அருளமுதம்:**
சூரியனின் பாதை உத்ராயண திசையிலிருந்து தட்சிணாயண திசைக்கு மாறும் ஆடி மாதத்தில் நட்சத்திர, திதிகளின் சிறப்பை வைத்தே ஆடிப்பெருக்கு, ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, ஆடி கிருத்திகை, ஆடி வெள்ளி, ஆடி செவ்வாய் என விசேஷ நாட்களாக எடுத்து வைக்கப் பெற்றுள்ளது. காலச் சக்கரத்தின் சூட்சுமம் அறிந்த பெரியோர்கள், உலக மக்களும் அதன் தனிச்சிறப்பை உணர்ந்து அறிவு சார்ந்த வாழ்வு வாழ்ந்து இறைவனை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கம் கொண்டே அனைத்து வழிபாட்டு முறைகளையும் உண்டாக்கி வைத்துள்ளனர்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் 182 :** இறைவனின் தேவ குடும்பம் இப்பூலவுலகிற்கு வரும் காலத்தில் வெளியாகும் வேத சரிதமே முதல் நூல். அதை வழிபட்டு நடந்தவர்கள் பேசிய யாவும் வழி நூலாகும். தங்கள் ஜீவனை தீர்க்கமாக தரிசனம் கண்டவர்களின் அமுத நாவில் நின்று கலைமகள் பேசுவதே வேதசரிதமாகிய முதல்நூல் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் - பிலிப்பியர் - அதிகாரம் 4 : 5** - தூலம் கடந்து நிற்கும் மெய்ப்பொருளில் இருக்கும் தேவ சமாதானத்தை உணர்வதே மெய்ஞானம். கர்த்தராகிய குருபிரானின் இரக்கத்தால், சாந்த குணம், சகிப்பு தன்மை, பொறுமை எனும் உயர்ந்த குணங்களை பெற்று உயிரொட்டிய இரகசியமாகிய தேவ சமாதானத்தை அடைந்து வாழலாம் என உணர்த்துவதே இத்தேவ திருவசனங்கள்.

*ஜீவசகோதரி பானுமதி :* **திருக்குரான் - மரியம் (அத்தியாயம் 19) திருவசனம் 7 : 10**
தாயின் கர்ப்ப கோளறையிலிருந்து புது உலகிற்கு வந்த எம்மை சைத்தானின் ஊசாட்டங்களிலிருந்து பாதுகாப்பாயாக! உலக வாழ்வை நீத்து மண்ணறை எனும் குறுகிய இருண்ட வீட்டுக்கு செல்லும் போது அங்கு ஏற்படும் வேதனைகளிலிருந்து நிவர்த்தி அளிப்பாயாக! மறுமையின் வேதனைகளிலிருந்து சாந்தி அருள்வாயாக!

மனிதனுக்கு முத்தி பாலிக்கும் வழிமுறையாகிய இம் மூன்றும் குருபிரானிடத்தில் முறையிட்டு பெற வேண்டிய வரமாகும் என உணர்த்துவதே மேற்படி திருவசனம்.

**பூரணப் புதையல் - குருபிரான் அருளமுதம்:**
அறிவின் சுவையை அறிவதே பூரணம். நம் தலை விதி எழுத்தை மாற்றி மதி எழுத்தாக்கி வைக்கும் அரும் பெரும் செயல் செய்யும் குருபெருமானே பூரண வடிவினர். கலிமா என்பது பெரு முத்தாக ஆதி பராபரையாக செங்கமல பாற்கடலாக இதய தோற்றமாக கலைகள் பதினாறும் பொருந்திய பூரணமாக உள்ளது. இதனை பூட்டடங்னா சாவியாகிய பூரண ஒளி வாய் மூலம் திறந்து காட்டி, பஞ்ச பூதங்களுக்குள் சத்துப் பெட்டகமாக இருக்கும் சுகபூரணத்தின் சூட்சுமத்தையும் குருபிரான் அருள்கிறார்கள். உதயப் பொருளாக அவரவரின் உள்ளத்துள் உறைந்திருக்கும் பூரணத்தில் பூட்டி வைத்து குறைவிலா நிறைவில் குருபிரான் நம்மை நிலைக்கச் செய்கிறார்கள். பின்னியிருந்த பெருமறை சாஸ்திரங்களின் ரகசியங்கள் இன்னது இன்னதென பிரித்துரைத்து அருளும் அண்ணலின் தெவிட்டாத தெள்ளமுத வர்ஷிப்புடனும் பரிசுத்த ஆவித்தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 28-07-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்

சாலை ஆண்டவர்கள் அருளிய பூரணப்புதையல் தன்னிலக்கணம் உணர்த்தல் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதமுடன் மறலி கை தீண்டா சாலை ஆண்டவர்கள் மெய்மதம் என்ற பட்டயம் சூட்டப் பெற்று சாலை ஆண்டவர்கள் அருளிய சாலை நடன விழா பாடலுடன் தீபம் ஏற்றி **சரவண நந்தவனத்தில்** புதுமனைக் குடியேற்ற விழா சிறப்புடன் நிறைவேறியது.

*ஜீவசகோதரி செஜிதா:* மனிதனிடம் இடகலை, பிங்கலை, சுழிமுனை எனும் கலைகள் கடந்து நம்மை பர கதியில் ஆக்குவது, கலைகள் 64க்கும் மேலான சாகாக் கலையாக உள்ளது. தசா புத்தியால் உண்டாகும் கலையே சாகுங் கலையாக உள்ளது. ஓம் என்ற பிரணவமே சுழினை வீடு என்கிறார் ஞான சைதன்ய அரசாகிய சுப்ரமணியர். குருபிரான் உணர்த்தும் குண்டலி அறிந்து அழியா தேகத்தில் குடியேறினால் சிவநிலை பெறலாம். குருவருளால் நெற்றிக்கண் திறப்பிக்கப் பெற்று சைவ நிலை அறிந்தவனே காலனின் அதிகாரம் கடந்தவன்.

*ஜீவசகோதரி சுமதி:* நமசிவய எனும் மந்திரப் பொருளான பஞ்சபூதங்களும் ஒன்றான இடமே சேரி. இதுவே மனுவின் சிரசிலுள்ள விபூதி, திருநீறு, வெண்ணீறு என்பதாம். கங்காளன் பூசும் கவசத்திருநீறே மங்காத ஆலவாயான் திருநீறாக, பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்சாட்சரமாக பெரியோர்களின் திருவாக்காக உள்ளது. இதுவே தன்மயமாக்கும் நெருப்பாக வித்தில்லா வித்தெனும் எழுதாத எழுத்தாக நரனை மனுவாக்கும் பஞ்சாட்சரமாக உள்ளது. பஞ்ச பூதத் தலை அரசனாகிய கணபதியே, எண்டிசைக்கும் நான் என முன் நிற்கும் பஞ்சாட்சரமாக, வழி, சத்தியம், ஜீவன், ஆன்மா, சிற்றணு வடிவு, காயத்ரி, உணர்வு, ஜோதி, அறிவு, நினைவு, வாசி, எண்ணம், மனம் என்பதாக உள்ளது.

*ஜீவசகோதரி சருபா:* இறைவனின் இருப்பிடம் மனிதனின் சுத்தத்துறை இருதயம் என்கிறது வேதங்கள் யாவும். மாயையை உண்டாக்கும் மனமே, கூரோங்கி ஓரறிவாக மாறினால் இறைவனாகிறது. தோற்றம் உள்ள ஆதியைப் படைத்த தோற்றமற்ற அனாதியே பரம்பொருள். உண்டு இல்லை என உணர வைக்கும் பொருளை அகத்தில் அரை நொடிக்குள் அறிய வைக்கும் செயலே தீட்சை. வேதமாகிய நம் அகம் காட்டும் கண்ணாடி, மெய் குருபிரானின் னாதமே. அதுவே, தேவ ரகசியம் அறிய வைத்து நம் உடலை னாதமாக மாற்றுகிறது. பற்றற்ற பரம் பொருளை பற்றி அழிவுலகப் பற்றுவிட்டு, எண்ணம்-சொல்-செயல் மூன்றிலும் நன்மை செய்தே வினை தீர்க்க முடியும். அறிவும் அனுபவமும் பெற்று இயக்கும் ஓர் ஆகாய விமானம் போல் குருவருள் கொண்டே காயத்துள் இருக்கும் ஆகாயத்தின் அம்சமாகிய மனதின் மாசகற்றி, மேல் நோக்கமாக இயக்க முடியும். அடி முடியும் அந்தமும் இல்லாத எதற்கும் முதற் பொருளாக விளங்கும் காரண தேகத்தை ஆசான் அருளால் அறிவதே ஞானம்.

*ஜீவசகோதரர் சொர்ணமதி:* காலக் கணக்கை அறிந்து அது கை வரவாகும் செயல் பழகுவதே பிரம்மவித்தை. சிற்றின்பம், பொய் இவற்றை அறிந்தே பேரின்பம், மெய் இன்னதென உணர முடியும். எக்காலமும் மெய்யை அறிவிக்க வரும் குருபிரான் காட்டும் வழியில் கடின முயற்சியுடன் பாடுபட்டு தினம் பழகியே பிறவிக் கடல் கடந்து பிறவாமை பெற முடியும்.

**என்னமோ வென்று உம்மை எண்ணி விட்டிருந்தேன்...** என்ற சாலை ஆண்டவர்களின் பாடலுடன் விடாமுயற்சி வெற்றி தரும் என குழந்தை டியானா கூறியதைத் தொடர்ந்து,

*ஜீவசகோதரர் ரிஷி:* மெய்க் குருபிரான் அருளால் மண்ணில் மாண்டு கிடந்த மனுவானது எழுப்பப் பெற்று தூக்கம், விழிப்பு இவற்றின் நிலையறிந்து, சாவருமுன் சாகப்பழகி, மறலி கைதீண்டா நிலையை அடைய ஏதுவாகிறது. ஆசான் அருளே அகமுகத்தில் ஒன்பது வாயில் உட்தாளிட்டு, இருதயக் கமலவாசனைக் கண்டு, எமனை சிவமாக்கி, காலத்தை வென்று,



Copyright © AMNA Trust, Chennai 

வாழும்போதே சொர்க்கத்தில் குடியேறச் செய்யும். மேல் நோக்காக எரியும் தீபம் போல் உடலை இயக்கும் உயிரை முப்பொருள் தத்தம் செய்து மனதை மேல் நோக்காக மாற்றி அறியும் செயலே தன்னை அறிதல்.

*ஜீவசகோதரர் தேவன்:* அறியாமையுடன் குருநாமம் சொல்லும் பயனற்ற பத்தியம் விட்டு, ஒரு மெய்குருபிரானின் வழி காட்டுதலின்படி இருப்பதே பத்தியம். தன் பெருவெளியாகிய சாலையே அவரவர் னாமத்தின் லட்சணத்தை அறிந்து உணரும் இடமாகும்.

*ஜீவசகோதரர் தேவானந்த்:* மெய்க்குருவின் அருளால் இருதயத்தைக் கண்டு நம் மூச்சானது ஓர் நிலைபட நின்று வணங்கும் வணக்கமே பொய் மெய்யும் பிரித்துணர்த்தி, பிறப்பெனும் பேதமை நீக்குகிறது. குருபிரான் செவிச்சுவை அருளி னரனை மனுவாக்கி, தேவனாக்கி எமன் நம்மை ஒன்றும் செய்யாமல் இருக்கச் செய்வதே செய்நன்றி.

*ஜீவசகோதரர் சங்கர்:* தேவ ரகசியம் தெரிய வைக்கும் பிரம்மவித்தை அருளும் பிரம்ம நிஷ்டரின் சொல் ஒரு பொருள் கொண்டு உயிரினும் மேலான ஒழுக்கனெறி நின்று பேரின்பம் பெற்று மரணமிலா பெருவாழ்வு வாழலாம். பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**28-07-2024 ~ ஞாயிற்றுக்கிழமை**

சாலை ஆண்டவர்கள் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **வாரும் உலகீரே – செயற்றுறை தேரும் புவியோரே…** என்ற **தெய்வத் தேடு கூடகம்** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!

*குருவினது தீக்ஷையின் மகிமையினால் தேகி செய்யும் எல்லாக் கருமங்களும் பலனோடு கூடினவைகளாக ஆகும். ஒரு சற்குருவை அடைந்த இலாபத்தினால், எல்லா விதமான இலாபங்களும் உண்டாகும். குருவில்லாதவன் மூடனாவான்.* ***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – ஜூலை மாதம் னிகழ்வுகள்

**07.07.2024 - ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் அவர்கள் முன்னிலையில் நன்மனத்தினர் பாபுசங்கர் - இந்துமதி தம்பதியரின் இளைய மகள் **ஸ்ருதி - யோகேஷ்** அவர்களின் திருமணம் சிவகாசியில் இனிதே நடைபெற்றது. அதே தினம் சிவகாசி ரோட்டரி அரங்கத்தில் ஞானத் தேட்டமுடைய னன்மன மக்களை சந்தித்து அருளமுதம் வழங்கினார்கள்.






## ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – வருங்கால அவை னிகழ்வுகள்

**05.09.2024 - வியாழக்கிழமை:** குருபிரான் அவர்கள் முன்னிலையில் னன்மன சகோதரி கீதா அவர்களின் இளைய மகள் **நந்தினி - விக்னேஷ் ராஜா** திருமணம் சென்னையில் நடைபெற உள்ளது.

**06.09.2024 - வெள்ளிக்கிழமை:** குருபிரான் அவர்கள் ஆசீர்பாதத்துடன் னன்மனத்தினர் ஸ்ரீனிவாசன் கீதாலட்சுமி தம்பதியரின் மகன் **அரவிந்த் கணேஷ் - மீனாட்சி பிரியங்கா** திருமணம் சிவகாசியில் நடைபெற உள்ளது.

**15.09.2024 - ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் அவர்கள் ஈரோடு-பவானி நகரில் எழுந்தருளி ஞான தேட்டமுடைய மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்க உள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 ஜூலை மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 101**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கு ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**

**Account Number: 50200047470073**

**IFSC: HDFC0000323**

**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

**[www.amnatrust.org](http://www.amnatrust.org)**

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 37 – Month: August 2024*



Copyright © AMNA Trust, Chennai